Crl.Misc.39

DEPOSITION OF WITNESS
( Chapter XXIII Code of Criminal Procedure.)
-------

IN THE COURT OF **JUDICIAL MAGISTRATE COURT, ARUPPUKOTTAI**.

| | | |
|---|---|---|
| Miscellaneous | :: | **CC 418/2025** |
| Deposition of witness for | :: | **PW. 5** |
| Name | :: | **ஜோதிமுத்து ( சார்பு ஆய்வாளர்)** |
| Father's Name | :: | |
| Village | :: | |
| Taluk | :: | |
| Age | :: | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 2026

---

**எதிரி ஆஜர். எதிரி தரப்பு வழக்கறிஞர் ஆஜர்**

**09.06.2026**

**முதல் விசாரணை:**

1. நான் தற்போது சென்னை மத்திய நுண்ணறிவு பிரிவில் சார்பு ஆய்வாளராக பணியில் உள்ளேன். கடந்த 24.08.2025ம் தேதி 12.45 மணிக்கு நான் பந்தல்குடி காவல் நிலையத்தில் சார்பு ஆய்வாளராக பணியில் இருந்தபோது சிறப்பு சார்பு ஆய்வாளர் ராஜ்குமார், தலைமை காவலர் பரமசிவம் ஆகியோர்கள் கிளம்பி பந்தல்குடி காவல் நிலைய சரக எல்லைக்குட்பட்ட பகுதியில் அனுமதியின்றி விற்கப்படும் மது மற்றும் சூதாட்டம் சம்மந்தமாக ரோந்து செய்து கண்காணித்து பந்தல்குடி பரமேஸ்வரி மில் குடியிருப்பு முன்பாக வந்தபோது சந்தேகத்திற்கு இடமான வகையில் கையில் சாக்குபையுடன் நின்றிருந்த நபர் எங்களை கண்டதும் கிளம்ப எத்தனித்தவரை நிறுத்தி விசாரிக்க அவரது பெயர் அய்யம்பிள்ளை என்று கூறினார். அவர் வைத்திருந்த சாக்கு பையை சோதனை செய்தபோது அந்த சாக்குபையில் சுமார் 180 மிலி அளவுள்ள EXPRESS Brandy – 13 மற்றும் 180 மிலி அளவுள்ள MONITOR Brandy bottle –16, 180 மிலி அளவுள்ள GOLDEN CHOICE Brandy bottle –2 ஆக மொத்தம் 31 பாட்டில்கள் இருந்தன.

2. மேற்படி மதுபாட்டில்கள் பற்றி எதிரி அய்யம்பிள்ளையிடம் விசாரித்தபோது விற்பனைக்கு வைத்திருந்ததாக கூறினார். எந்தவொரு அரசு அனுமதியும் உரிமமும் இல்லாமல் அதிக லாப நோக்கத்துடன் விற்பனை செய்வதற்காக வைத்திருந்த குற்றத்திற்காக மேற்படி அய்யம்பிள்ளையை 12.50 மணிக்கு கைதுக்கான காரணம் கூறி கைது செய்தேன். மேற்படி மது பாட்டில்களை மதியம் 01.00 மணிக்கு தனிநபர் சாட்சிகள் பாஸ்கரன், சிவசங்கரநடராஜ் மற்றும் போலீஸ் பார்ட்டிகள் முன்னிலையில் அத்தாட்சி தயார் செய்து கைப்பற்றி அதில் சாட்சிகள் பாஸ்கரன், சிவசங்கரநடராஜ், சிறப்பு சார்பு ஆய்வாளர் ராஜ்குமார் மற்றும் த.கா பரமசிவம் ஆகியோர்களிடம் கையெழுத்து பெற்றேன்.

**3.** பின்னர் சம்பவ இடத்திலிருந்து எதிரி மற்றும் கைப்பற்றப்பட்ட சொத்துக்களுடன் பந்தல்குடி காவல் நிலையம் வந்து எதிரி அய்யம்பிள்ளை மீது நிலைய குற்ற எண். 113/2025 பிரிவுகள் 4(1)(C) TNP Act ன் கீழ் வழக்கு பதிவு செய்தேன். **(முதல் தகவல் அறிக்கை அசாஆ. 4 ஆக குறியீடு செய்யப்படுகிறது )** பின்னர் அசல் முதல் தகவல் அறிக்கையை கனம் நீதித்துறை நடுவர் நீதிமன்றத்திற்கும் மற்ற நகல்களை சம்மந்தப்பட்ட உயர் அதிகாரிகளுக்கும் அனுப்பி வைத்தேன்.

4. பின்னர் எதிரியை நிலைய பாராவசம் ஒப்படைத்து அன்றைய தினமே தக்க இருநபர் ஜாமீனில் நிலைய பிணையில் விடுவித்தேன். அன்றைய தேதியிலேயே தனிநபர் சாட்சிகள் பாஸ்கரன், சிவசங்கரநடராஜ் மற்றம் என்னுடன் ரோந்து பணிக்கு வந்த சிறப்பு சார்பு ஆய்வாளர் ராஜ்குமார், தலைமை காவலர் பரமசிவம் ஆகியோர்களை தனித்தனியே விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தேன்.

5. பின்னர் 16.09.2025ம் தேதியில் உதவி ஆணையர் (Excise Department, Virudhunagar) அவர்களிடம் இவ்வழக்கில் கைப்பற்றபட்ட சுமார் 180 மிலி அளவுள்ள EXPRESS Brandy – 13 மற்றும் 180 மிலி அளவுள்ள MONITOR Brandy bottle –16. 180 மிலி அளவுள்ள GOLDEN CHOICE Brandy bottle –2 ஆக மொத்தம் 31 பாட்டில்கள் மற்றும் மேற்படி மதுபாட்டில்களை வைத்திருந்த சாக்கு பை ஆகியவற்றை ஒப்படைத்து ந.க.க. எண். 2/20.01.2025ன்படி அவற்றை அழித்தற்கான சான்றினை பெற்றேன். **(அழித்தல் சான்று அசாஆ.5 ஆக குறியீடு செய்யப்படுகிறது)**

6. பின்னர் அன்றைய தினமே இவ்வழக்கின் புலன் விசாரணை முடித்து எதிரி அய்யம்பிள்ளை என்பவருக்கு எதிராக பிரிவு 4(1)(C) TNP Amendment Act ன் கீழ் குற்ற இறுதி அறிக்கை கனம் நீதிமன்றத்தில் தாக்கல் செய்தேன்.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை**

1. இவ்வழக்கில் நான் தான் புகார்தாரர் மற்றும் புலன் விசாரணை அதிகாரி என்றால் சரிதான். சம்பவ இடமானது பொது மக்கள் அதிகம் கூடும் இடம் என்றால் சரிதான். எதிரியிடமிருந்து கைப்பற்றப்பட்டதாக கூறப்படும் பாட்டில்களில் மதுபானங்கள் தான் இருந்ததா என்பதை காண்பிக்க பகுப்பாய்விற்கு நான் அனுப்பவில்லை என்றால் சரிதான். வழக்கு ஆவணங்கள் அனைத்தும் காவல் நிலையத்தில் வைத்து உற்பத்தி செய்யப்பட்டவை என்றாலும் புள்ளிவிவரத்திற்காக எதிரியின் மீது பொய் வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. நான் தான் இவ்வழக்கின் புகார்தாரர் மற்றும் விசாரணை அதிகாரி என்ற காரணத்தினால் இவ்வழக்கானது சட்டப்படி நிலைக்கதக்கதல்ல என்றால் சரியல்ல. எதிரியிடமிருந்து மதுபாட்டில்கள் கைப்பற்றப்பட்டதாக கூறப்படும் சமயத்தில் அதனை வீடியோ பதிவு செய்யவில்லை என்றால் சரிதான். மேற்படி காரணத்தினால் எந்த பொருளும் எதிரியிடமிருந்து கைப்பற்றப்படவில்லை என்றால் சரியல்ல.

**மறுவிசாரணை – இல்லை**